1981 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குப் பொருந்தாத துணைக் கேள்வி இது. என்னிடத்திலே அதற்கான தகவல் இல்லை.

குமரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம்.

* வினா எண். 44 திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் தோவாளை அகஸ்தீஸ்வரம் தாலூக்காக்களில் புதிதாகத் தீப்பெட்டி தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்பொழுது எத்தனை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் ஆறும், தோவாளை வட்டத்தில் ஒன்றும், ஆக ஏழு தீப்பெட்டி பெண் தொழிலாளர் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் தாலூக்காக்களில் அரசு நிதிஉதவியின்றி புதிய தீப்பெட்டிதொழிற் சேவை சங்கங்கள் நிறுவக் கோரி மனுக்கள் வருமானால், தொழிற்துறை வணிக இயக்குநர் தக்க நடவடிக்கைகள் எடுப்பார்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூரில் இருக்கக்கூடிய பெடரேஷன் மூலமாக ஆரல்வாய்மொழிப் பகுதியிலே புதிதாகத் தீப்பெட்டிக் குச்சிகளைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காக இடத்தையெல்லாம் ஆய்வு செய்து சென்றிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொழிற்சாலை எப்போது தொடங்கப்படும் என்று தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் அரசின் பரிசிலனையில் இருக்கின்றன. விரைந்து ஆவன செய்யப்படும்.

முக்கொம்பு என்னும் இடத்தைச் சுற்றுலாத் தலமாக்கும் திட்டம்

* வினா எண். 45—திரு. இரா. கருப்பையா: திரு. எம். சின்னசாமி மாண்புமிகு செய்தி-அறநிலை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :